# தாரமங்கலம் நகராட்சி
# நகர்மன்ற சாதாரண கூட்டம்
# நகர்மன்ற தலைவர் அவர்களால் கொண்டு வரப்படும் தீர்மானம்

2023ஆம் ஆண்டு ஜனவரி மாதம் 25.01.2023ம் தேதி புதன்கிழமை முற்பகல் 11.00 மணிக்கு தாரமங்கலம் நகர்மன்றத்தின் சாதாரணக்கூட்டம் நகராட்சி மன்ற கூட்ட அரங்கத்தில் நடைபெற உள்ளதால் அனைத்து வார்டு உறுப்பினர்களும் தவறாது கலந்து கொள்ளுமாறு அன்புடன் கேட்டுக்கொள்கிறேன்.

**முன்னிலை :–** **திரு.டி.எம்.எஸ்.குணசேகரன்.,**
**நகராட்சி மன்ற தலைவர்,**
**தாரமங்கலம் நகராட்சி.**

**பொருள் எண்.1**

தாரமங்கலம் நகராட்சி பகுதிகளில் நவம்பர் மற்றும் டிசம்பர் மாதங்களில் நிகழ்ப்பெற்ற பிறப்பு மற்றும் இறப்பு பதிவுகள் மன்றத்தின் பார்வைக்கு வைக்கப்படுகிறது.

| மாதம் | பிறப்பு | | | இறப்பு | | | இறந்து பிறந்தவை | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| | ஆண் | பெண் | மொத்தம் | ஆண் | பெண் | மொத்தம் | ஆண் | பெண் | மொத்தம் |
| நவம்பர் 22 | 1 | 0 | 1 | 11 | 7 | 18 | 0 | 0 | 0 |
| டிசம்பர் 22 | 2 | 3 | 5 | 7 | 7 | 14 | 0 | 0 | 0 |

**பொருள் எண்.2**

துணை இயக்குநர், சுகாதார பணிகள் சேலம் அவர்களின் அலுவலக ந.க.எண்.199/இ5/2020, நாள்.04.05.2022–ன் கடிதத்தில் தற்போது 2022ஆம் வருடம் ஏப்ரல் மாதத்திலிருந்து விட்டு விட்டு மழை பெய்து வருவதாலும் இதனை தொடர்ந்து, தென் மேற்கு பருவமழை ஆரம்பிக்கும் , ஜீன் மாதத்திலிருந்து டெங்கு கொசுப்புழு வளர் நிலைகள் அதிகரித்து டெங்கு காய்ச்சல் அதிகரிக்க வாய்ப்பு உள்ளது. ஆகையால் டெங்கு காய்ச்சல் பரவாமலும், அதிகரிக்காமலும் தடுப்பதற்கு டெங்கு கொசுப்புழு அடர்த்தியை டெங்கு கொசுப்புழு ஒழிப்பு பணி செய்து குறைக்க 08/2022 முதல் 10/2022 வரை மன்ற தீர்மானத்தில் பொருள் வைக்கப்பட்டு, 20 டெங்கு மஸ்தூர் பணியாளர்கள் தொடர்ந்து பணிபுரிந்து வருகிறார்கள். ஆனால் தற்போது பணி செய்யும் காலம் 31.10.2022 அன்று முடிவடைவதால், 01.11.2022 முதல் 31.03.2023 வரை உள்ள காலத்திற்கு தற்காலிகமாக 20 டெங்கு மஸ்தூர் பணியாளர்களை பணி செய்திட நாள் ஒன்றுக்கு ரூ.250/– வீதம் பழைய ஊதிய விகிதத்திலேயே பணி தொடர்ந்து செய்திடவும் மேற்படி செலவினத்தினை பொது நிதியிலிருந்து வழங்க மன்றத்தின் பார்வைக்கும் அனுமதிக்கும் வைக்கப்படுகிறது.

**பொருள் எண்.3**

தாரமங்கலம் நகராட்சி தற்போது 27 வார்டுகளை கொண்ட இரண்டாம் நிலை நகராட்சி ஆகும். 2011–ம் ஆண்டு மக்கள் தொகை கணக்கெடுப்பின்படி 30222 ஆகும், தற்போதைய மக்கள் தொகை சுமார் 32035 ஆகும். இந்நகராட்சியின் மொத்த பரப்பளவு 9.72 சதுர கிலோமீட்டர் கொண்டதாகும். இந்நகராட்சியில் 8833 குடியிருப்புகளும், 492 வர்த்தக நிறுவனங்களும் உள்ளது. இதன்மூலம் நாள் ஒன்றுக்கு 8.700 மெட்ரிக் டன் அளவு திடக்கழிவுகள் சேகரிக்கப்பட்டு வருகிறது. பொது சுகாதாரம் மற்றும் திடக்கழிவு மேலாண்மை திட்டத்தின் கீழ் திடக்கழிவுகளை சேகரித்து முதன்மை சேகரிப்பு பணி மற்றும் முறைப்படி நுண் உரம் தயாரித்தல் பணி நடைபெற்று வருகிறது.

நகராட்சி நிர்வாக இயக்குநர், சென்னை–28 அவர்களின் சுற்றறிக்கை ந.க.எண்.21787/ 2021/EA2 நாள்.02.10.2021 வெளியிட்டுள்ள அளவுகோல்படி இந்நகராட்சியில் திடக்கழிவு மேலாண்மை திட்ட பணிகள் சிறப்பாக செயல்படுத்திட தற்போது பணியிலுள்ள துப்புரவு ஆய்வாளர்–1, துப்புரவு பணி மேற்பார்வையாளர்–2, தூய்மை பணியாளர்கள் –36, ஓட்டுநர்–1, ஆகியோர் உள்ளனர். திடக்கழிவு பணியாளர்கள் –58, மற்றும் 2 வாகன ஓட்டுநர்கள் இந்திரா மரகதம் மகளிர் சுய உதவிக்குழுவிற்கான பணி காலம் 31.10.2022 அன்றுடன் முடிவடைவதால், மேலும் ஐந்து மாதங்களுக்கு 01.11.2022 முதல் 31.03.2023 வரை ஒப்பந்த அடிப்படையில் பணி செய்வதற்கும், இதற்கான செலவினத்தினை பொதுநிதியில் மேற்கொள்ளவும் மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

**பொருள் எண்.4**

தாரமங்கலம் நகராட்சியின் 2021–2022 ஆம் ஆண்டு தணிக்கை ஆண்டு கணக்குகள் தயாரிக்க நகர் மன்ற தலைவரின் முன் அனுமதி பெற்று விலைப்புள்ளி கோரப்பட்டதில் குறைந்த விலைப்புள்ளி கோரிய திரு.அன்பு என்பவருக்கு ரூ.40000/– பொது நிதியிலிருந்து தொகை வழங்கியமைக்கு பின்னேற்பு பெற மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

**பொருள் எண்.5**

சேலம் மாவட்டம் தாரமங்கலம் நகராட்சிக்கு உட்பட்ட 1 முதல் 27 வார்டுகளிலும் 4 மேல்நிலை நீர்தேக்க தொட்டிகள் மூலம் ஆத்தூர் நரசிங்கபுரம் கூட்டுகுடிநீர் திட்டம், மேட்டூர் சேலம் சாலையோர வழித்தடத்திட்டம் மற்றும் உள்ளூர் குடிநீர் ஆதாரம் மூலம் தினசரி 3.20 MLD குடிநீர் பொது மக்களுக்கு விநியோகம் செய்யப்பட்டு வருகிறது. மேலும் தாரமங்கலம் நகராட்சியின் அனைத்து வார்டுகளிலும் தினசரி குடிநீர் விநியோகத்தினை முறைப்படுத்திட ஏதுவாக தாரமங்கலம் நகராட்சியில் உள்ள அனைத்து பகுதிகளிலும் ஆய்வு செய்து குடிநீர் விநியோகத்தினை மேம்படுத்திட தேவைப்படும் அனைத்து வசதிகளையும் ஏற்படுத்திடும் வகையில் தனியார் நிறுவனத்தின் மூலம் திட்டமிடும் பணி மேற்கொள்ளவும் அதற்கான செலவினத்தை நகராட்சி குடிநீர் நிதியில் இருந்து செலவிட மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

பொருள் எண் .6

தாரமங்கலம் நகராட்சிக்கு சொந்தமாக 4 மேல்நிலை நீர்க்க தொட்டிகள் உள்ளது. 1) வாரச்சந்தையில் 8.00 லட்சம் லிட்டர், 2) பாரக்கல்லூர் 1.00 லட்சம் லிட்டர், 3) கீழ்சின்னாகவுண்டம்பட்டி 0.60 லட்சம் லிட்டர் மற்றும் 4) கிழக்கு பாவடி பகுதியில் 2.00 லட்சம் லிட்டர் கொள்ளளவு கொண்ட மேல்நிலை நீர் தேக்க தொட்டிகள் உள்ளது. மேற்கண்ட 4 மேல்நிலை நீர் தேக்க தொட்டிகளிலும் உள்ள குடிநீரினை மாதம் ஒரு முறை பகுப்பாய்வு செய்ய, அரசு ஆய்வகத்திற்கு அனுப்பி வைத்து அறிக்கை பெறுவதற்கு ஆகும் செலவினத்தினை நகராட்சியின் குடிநீர் திட்ட கணக்கு நிதியில் மேற்கொள்ள மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

பொருள் எண் .7

தாரமங்கலம் நகராட்சிக்கு உட்பட்ட கருக்குப்பட்டி முனியப்பன் கோவில் எதிரில் தாதபிள்ளையூர் சாலையின் குறுக்கே சிமெண்ட் பைப் பதித்தல் 2, 5 வார்டுகளில் ஏழுமலையான் வீடு அருகில் 2000 லிட்டர் சின்டெக்ஸ் டேங்க் தொட்டி வைக்க இரும்பு , ஆங்கிள் கேட் வால்வு பைப் மற்றும் இதர உபகரணங்கள் வாங்கி பொருத்தும் பணி ஆகிய இரண்டு பணிகள் செய்தமைக்கு ஸ்ரீ லட்சுமி எண்டர்பிரைசஸ் பில்டிங் மெட்டிரியல்ஸ் சப்ளையர் என்ற நிறுவனத்திற்கு தொகை ரூ.14000/– மற்றும் ரூ.6955/– ஆக மொத்தம் ரூ.20955/–யை தாரமங்கலம் நகராட்சியின் நகர் மன்ற தலைவரின் முன் அனுமதி பெற்று பொது நிதியிலிருந்து தொகை வழங்கியமைக்கு பின்னேற்பு பெற மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

பொருள் எண் .8

தாரமங்கலம் நகராட்சிக்கு 2022–2023 ஆம் ஆண்டில் நடைபெற்று வரும் திட்டப்பணிகளின் விவரம் குறித்து காலைக்கதிர் நாளிதழில் விளம்பரம் செய்தமைக்கு தொகை ரூ.8001/–யை நாள்.04.10.2022–ன்படி தொகை வழங்க வேண்டி மகாலட்சுமி மீடியா பிரைவேட் லிமிடெட் நிறுவனத்திடமிருந்து பில் பட்டியல் வரப்பெற்றுள்ளது. மேற்படி தொகையினை தாரமங்கலம் நகராட்சியின் நகர் மன்ற தலைவரின் முன் அனுமதி பெற்று பொது நிதியிலிருந்து மேற்படி தொகை ரூ.8001/– வழங்கியமைக்கு பின்னேற்பு பெற மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

பொருள் எண் .9

தாரமங்கலம் நகராட்சிக்கு 2022–2023 ஆம் ஆண்டில் நடைபெற்று வரும் திட்டப்பணிகளின் விவரம் குறித்து தினகரன் நாளிதழில் விளம்பரம் செய்தமைக்கு தொகை ரூ.10773/–யை நாள்.04.10.2022–ன்படி தொகை வழங்க வேண்டி கல் பப்ளிகேசன்ஸ் நிறுவனத்திடமிருந்து பில் பட்டியல் வரப்பெற்றுள்ளது. மேற்படி தொகையினை தாரமங்கலம் நகராட்சியின் நகர் மன்ற தலைவரின் முன் அனுமதி பெற்று பொது நிதியிலிருந்து தொகை ரூ.10773/– வழங்கியமைக்கு பின்னேற்பு வேண்டி மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

**பொருள் எண் .10**

தாரமங்கலம் நகராட்சி வாரச்சந்தையில் அவசர அவசியம் கருதி புதிய அலுவலக கட்டிடம் கட்டும் பகுதியில் ஏற்கனவே உள்ள பழைய பைப் லைன் மாற்றிவிட்டு புதியதாக HDPE - பைப் லைன் குழாய் பதிக்கும் பணி மேற்கொண்டமைக்கு தொகை ரூ.2,36,678/—யை திரு.சக்திவேல் சண்முகம் என்ற ஒப்பந்ததாரருக்கு தாரமங்கலம் நகராட்சியின் குடிநீர் நிதியிலிருந்து தொகை வழங்கியமைக்கு பின்னேற்பு பெற மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

**பொருள் எண் .11**

தாரமங்கலம் நகராட்சிக்கு உட்பட்ட 2,3,4,15,24 மற்றும் 25 ஆகிய வார்டு பகுதிகளில் குட்டு மற்றும் பிளாட்பாரம் பழுதடைந்துள்ளதை புதுப்பித்து கட்டும் பணி செய்து கொடுத்த திரு.எம்.பழனிசாமி என்பவருக்கு ரூ.49000/— தொகையினை தாரமங்கலம் நகராட்சியின் நகர் மன்ற தலைவரின் முன் அனுமதி பெற்று குடிநீர் நிதியிலிருந்து தொகை வழங்கியமைக்கு பின்னேற்பு வேண்டி மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

**பொருள் எண் .12**

தாரமங்கலம் நகராட்சிக்கு ஆணையாளர் அவர்களின் அலுவலக பயன்பாட்டிற்காக மகேந்திரா நிறுவனத்திடமிருந்து பொலிரோ வாகனம் TN.30 LW.5430 கொள்முதல் செய்யப்பட்டுள்ளது. தற்போது மேற்படி வாகனத்திற்கு அத்தியாவசிய தேவையான இதர உபகரணங்கள் பொருத்தியமைக்கு தொகை ரூ.34019/— காசோலையாக Yoga motors என்ற நிறுவனத்துக்கு தாரமங்கலம் நகராட்சி நகர் மன்ற தலைவரின் முன் அனுமதி பெற்று பொது நிதியிலிருந்து தொகை வழங்கியமைக்கு பின்னேற்பு வேண்டி மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

**பொருள் எண் .13**

தாரமங்கலம் நகராட்சிக்கு நகர் மன்ற தலைவர் அவர்களின் அலுவலக பயன்பாட்டிற்காக மகேந்திரா நிறுவனத்திடமிருந்து ஸ்கார்பியோ வாகனம் TN.30 LW.5460 கொள்முதல் செய்யப்பட்டுள்ளது. தற்போது மேற்படி வாகனத்திற்கு அத்தியாவசிய தேவையான இதர உபகரணங்கள் பொருத்தியமைக்கு தொகை ரூ.55295/—யை Yoga motors என்ற நிறுவனத்துக்கு தாரமங்கலம் நகராட்சி நகர் மன்ற தலைவரின் முன் அனுமதி பெற்று பொது நிதியிலிருந்து வழங்கியமைக்கு பின்னேற்பு வேண்டி மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

**பொருள் எண் .14**

தாரமங்கலம் நகராட்சியின் அலுவலக பயன்பாட்டிற்கு **26.10.2022** முதல் **14.11.2022** வரை அலுவலகத்திலுள்ள கோப்புகள் தயார் செய்ய ஏ4, பேப்பர் வாங்கியது, கோப்புகள் ஜெராக்ஸ் எடுத்தது மற்றும் பைண்டிங் செய்து கொடுத்தமைக்கு பி.தன்ராஜ் ராசி பிரிண்டர்ஸ் என்ற நிறுவனத்திற்கு ரூ.**10447/–** தாரமங்கலம் நகராட்சியின் நகர் மன்ற தலைவரின் முன் அனுமதி பெற்று பொது நிதியிலிருந்து வழங்கியமைக்கு பின்னேற்பு வேண்டி மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

**பொருள் எண் .15**

தாரமங்கலம் நகராட்சிக்கு உட்பட்ட **1,4,5** மற்றும் **22** ஆகிய வார்டுகளில் புல், பூண்டு, முள் செடிகள் அதிக அளவில் வளர்ந்துள்ளதாலும் மற்றும் சாக்கடைகளில் குப்பை மண் நிரம்பி உள்ளதாலும், தினசரி பருவமழை பொழிந்து வருவதால், புல் பூண்டுகள் வளர்ந்துவிட்டதால், பொது மக்கள் நடமாடும் பகுதிகளில் விஷ பூச்சிகள் இருப்பதால், மேற்படி இடங்களில் உள்ள புல் , பூண்டுகளையும் மழைநீர் அடைப்புகளை ஜெ.சி.பி. வாகனம் கொண்டு பணி செய்து கொடுத்த கலை கன்ஸ்ட்ரக்சன்ஸ் நிறுவனத்திற்கு தொகை ரூ.**34200/–** யை தாரமங்கலம் நகராட்சியின் நகர் மன்ற தலைவரின் முன் அனுமதி பெற்று பொது நிதியிலிருந்து வழங்கியமைக்கு பின்னேற்பு வேண்டி மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

**பொருள் எண் .16**

தாரமங்கலம் நகராட்சி அலுவலக பயன்பாட்டிற்கு பயன்படுத்தப்படும் கணினி பிரிண்டர் டோனர்கள், **9** எண்ணிக்கை கருப்பு மை பூர்த்தி செய்தது, ஜெராக்ஸ் மெஷின் கருப்பு மை **3** பூர்த்தி செய்து கொடுத்தது, இதர உபகரணங்கள் வாங்கியமைக்கு லாஜிக் இன்போ டெக் நிறுவனத்திற்கு ரூ.**18550/–**யை நாள்.**21.11.2022** ஆம் தேதியில் தாரமங்கலம் நகராட்சியின் நகர் மன்ற தலைவரின் முன் அனுமதி பெற்று பொது நிதியிலிருந்து வழங்கியமைக்கு பின்னேற்பு வேண்டி மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

**பொருள் எண் .17**

தாரமங்கலம் நகராட்சி தூய்மை பணியாளர்களுக்கு மாதம் தோறும் வழங்கப்படும் சோப் வாங்கியமைக்கும், தினசரி நாளிதழ் வாங்கியது, மைக், டேபிள் பேடு, பைப் லைன் **6** இன்ஜ் கேட் வால்வு பழுது நீக்கம் செய்தமைக்கும், இதர செலவினங்களுக்கு ரூ.**26872/–**யை திரு.ராமன் என்பவருக்கு தாரமங்கலம் நகராட்சியின் நகர் மன்ற தலைவரின் முன் அனுமதி பெற்று பொது நிதியிலிருந்து வழங்கியமைக்கு பின்னேற்பு வேண்டி மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

பொருள் எண் .18

தாரமங்கலம் நகராட்சி நகர் மன்ற கூட்டம் 19.10.2022ஆம் ஆண்டு தேதி 28.10.2022 ஆம் தேதிகளில் 2 கூட்டங்கள் நடத்தியமைக்கு மைக் செட், ஒலிபெருக்கி, ஸ்பீக்கர் ஆகியவை வாடகைக்கு எடுத்து பயன்படுத்தியமைக்கு தொகை ரூ.4500/– மற்றும் நகராட்சி பகுதி சபா கூட்டம் குறித்து 01.11.2022 அன்று நாள் முழுவதும் விளம்பரம் செய்தமைக்கும் வாடகை ஆட்டோ வாகனம் மைக் செட், ஒலிபெருக்கி, ஸ்பீக்கர் வாடகைக்கு எடுத்து பயன்படுத்தியமைக்கும் தொகை ரூ.7500/– ஆக மொத்தம் ரூ.12000/– ஜீவா சவுண்ட் சிஸ்டம், வெங்கடேஷ் என்பவருக்கு தாரமங்கலம் நகராட்சியின் நகர் மன்ற தலைவரின் முன் அனுமதி பெற்று பொது நிதியிலிருந்து வழங்கியமைக்கு பின்னேற்பு வேண்டி மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

பொருள் எண் .19

தாரமங்கலம் நகராட்சிக்கு உட்பட்ட பகுதியில் தெருவிளக்கு சுவிட்ச் பாக்ஸ் பழுது, சோடியம் கிளாம்பு 3 இடங்களில் ,அலுவலகத்திற்கு பூட்டு வாங்கியது, 2 இன்ஜ் கேட் வால்வு பழுதடைந்தது மரை போட்டு தயார் செய்தது , பேருந்து நிலைய உயர் கோபுர விளக்கு சுவிட்ச் பாக்ஸ் சரி செய்தது, எம்.ஜி.ஆர்.மன்றம் கைலாசநாதர் கோவில் பீஸ் கேரியர் மாற்றியது, பேட்டரி வாகனத்தில் விளம்பரம் செய்வதற்கு ரேடியோ செட் வாங்கியது இதர செலவினங்கள் செய்தமைக்கு மணிமேகலை என்பவருக்கு தாரமங்கலம் நகராட்சியின் நகர் மன்ற தலைவரின் முன் அனுமதி பெற்று பொது நிதியிலிருந்து ரூ.32315/–யை வழங்கியமைக்கு பின்னேற்பு பெற மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

பொருள் எண் .20

சேலம் மாவட்டம் தாரமங்கலம் நகராட்சிக்கு சொந்தமான பேருந்து நிலைய கடை எண்.5 மற்றும் ஜெ.வி.வி.டி கடை எண்.1 மற்றும் 2 ஆகிய கடைகளை 2022–2023 ஆம் ஆண்டிற்கு இவ்வலுவலக பொது ஏல அறிவிப்பு ந.க.எண்.15/2022/அ1 நாள்.06.06.2022–ல் முதல் ஏலம் , இவ்வலுவலக பொது ஏல அறிவிப்பு ந.க.எண்.15/2022/அ1 நாள்.27.06.2022–ல் இரண்டாவது ஏலமும் மேலும் இவ்வலுவலக பொது ஏல அறிவிப்பு ந.க.எண்.15/2022/அ1 நாள்.18.07.2022–ல் மூன்றாவது ஏலமும் நடைபெற்றதில் ஏலதாரர்கள் மேற்படி கடைகளின் மாதாந்திர வாடகை தொகை மூன்று ஆண்டு சராசரி தொகைக்கு குறைவாக ஏலம் கோரியதாலும் நிர்வாக காரணங்களினாலும் ஏலம் நிறுத்தி வைக்கப்பட்டது. இதில் ஜெ.வி.வி.டி கடை எண்.2–ஐ திரு.பூபதி என்பவர் அதிக பட்ச மாதாந்திர வாடகை தொகையாக ரூ.7700/–க்கு ஏலம் எடுத்துவிட்டு பிறகு கடையை வேண்டாம் என்று எழுதி கொடுத்துவிட்டார். ஆகையால் மேற்படி பேருந்து நிலைய கடை எண்.5 மற்றும் ஜெ.வி.வி.டி கடை எண்.1 மற்றும் 2 ஆகிய கடைகள் 2022–2023ஆம் ஆண்டிற்கு 01.02.2023 முதல் 31.01.2026 முடிய மூன்று ஆண்டுகளுக்கு ஏலம் விட நகர் மன்ற தலைவர் முன் அனுமதி பெறப்பட்டுள்ளது பின்னேற்பு பெற மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

**பொருள் எண் .21**

சேலம் மாவட்டம் தாரமங்கலம் நகராட்சி எல்லைக்கு உட்பட்ட வாரச்சந்தையில் உள்ள நவீன ஆட்டிறைச்சி கடைகள் 1 முதல் 13 வரை ஏலதாரர்களால் மட்டன் கடை நடத்தி வந்தார்கள். அதில் கடை எண்.4,5,6,7,9 ஆகிய கடைகள் பழுதடைந்துள்ளதாலும், கடையில் வியாபாரம் சரிவர இல்லாத காரணத்தினாலும், கடையினை வேண்டாம் என்று ஏலதாரர்களால் தெரிவிக்கப்பட்டுள்ளது. ஆகையால் மேற்படி கடைகள் 4,5,6,7,9 பழுது நீக்கம் செய்யும் வரை 01.04.2022 முதல் மாதாந்திர வாடகை தொகை கேட்பு நிர்ணயம் செய்வதிலிருந்து விலக்களிக்கும்படி மன்றத்தின் பார்வைக்கும் அனுமதிக்கும் வைக்கப்படுகிறது.

**பொருள் எண் .22**

சேலம் மாவட்டம் தாரமங்கலம் நகராட்சிக்கு சொந்தமான வாரச்சந்தை சுங்க வசூல் வண்டிப்பேட்டை சுங்க வசூல் ஆடு அடிக்கும் தொட்டி ஆகிய இனங்கள் 2022–2023 ஆம் ஆண்டிற்கு அரசு விதிகளின்படி ஏலம் விடப்பட்டு ஏல தொகை மற்றும் இதர தொகை முழுவதும் அரசாணை நிலை எண்.181 நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் (நிதி.4) துறை நாள்.19.9.2008–ன் படி ஏலம் விடப்பட்டது. தற்போது மேற்படி அரசாணையின்படி ஏலம் விடப்பட்ட முதல் ஆண்டின் ஏல கேட்பு தொகையில் 5 சதவீதம் உயர்வு செய்து ஏலம் எடுத்த ஏலதாரர்களிடம் தொகை வசூல் செய்யவும் 2023–2024 ஆம் ஆண்டிற்கு புதுப்பித்தல் செய்து தரவும் மன்றத்தின் பார்வைக்கும் அனுமதிக்கும் வைக்கப்படுகிறது.

**பொருள் எண் .23**

சேலம் மாவட்டம் தாரமங்கலம் நகராட்சி எல்லைக்கு உட்பட்ட எம்.ஜி.ஆர்.காலனியில் அமைந்துள்ள சமுதாய கூடம் நாளது வரை பயன்பாட்டில் இல்லை. அதில் முன்பக்க கதவு மற்றும் பின் பக்க கதவு உடைந்து தனியாக உள்ளது. எலட்ரிகல்ஸ் பணியும் முழுமையாக செய்ய வேண்டி உள்ளது. சமுதாய கூடம் முழுவதும் தூய்மை செய்து வண்ணம் பூச வேண்டும் மேலும் சமுதாய கூடத்தில் மணமகன் மற்றும் மணமகள் அறையை தவிர கழிப்பிட வசதி ஏதும் இல்லை. மேற்குறிப்பிட்ட அனைத்து பணிகளும் செய்து சமுதாய கூடத்தினை பொது மக்களின் பயன்பாட்டிற்கு கொண்டு வருவதற்கு ஆகும் உத்தேச மதிப்பீடு ரூ.350000/–யை நகராட்சியின் பொதுநிதியில் மேற்கொள்ள மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

**பொருள் எண் .24**

சேலம் மாவட்டம் தாரமங்கலம் நகராட்சியில் நுண் உரமாக்கும் மையம் தொடர்ந்து பணி நடைபெற்று கொண்டு வருகிறது. அவ்விடத்தில் உள்ள பிளாஸ்டிக் பைகளை பெயிலிங் செய்வதற்கு பயன்படுத்தும் ஹைட்ராலிக் பெயிலிங் இயந்திரம் (Hydralic Bailing Machine) புதியதாக வாங்கி பயன்படுத்துவதற்கு ஆகும் உத்தேச மதிப்பீடு ரூ.360000/– நகராட்சியின் பொதுநிதியிலிருந்து வாங்கி கொள்ளவும் அதன் பின் 15வது நிதிக்குழு மான்ய திட்ட நிதி வந்தவுடன் பொதுநிதியில் ஈடு செய்து கொள்ள மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

பொருள் எண் .25

வட்டார போக்குவரத்து அலுவலர் சேலம் மேற்கு அவர்களின் கடித ந.க.எண்.அ4/38727/2021 நாள்.12.09.2021–ன்படி தாரமங்கலம் சர்வே எண்.176/1ஏ மற்றும் 13/1ஏ–ல் இயங்கி வரும் தாரமங்கலம் நகராட்சிக்கு சொந்தமான டி கிரேடு பேருந்து நிலையத்தினை ஓராண்டு காலத்திற்கு புதுப்பிக்க தீயணைப்பு துறையிடமிருந்து தடையின்மை சான்று பெற்று வழங்கும்படி வரப்பெற்ற கடிதத்தின்படி தற்போது மேற்படி தடையின்மை சான்று பெற்று வட்டார போக்குவரத்து அலுவலகம் சேலம் மேற்கு அலுவலகத்திற்கு இவ்வலுவலக கடித ந.க.எண்.469/2018/அ1 நாள்.02.01.2023ன்படி அனுப்பி வைக்கப்பட்டுள்ளது மன்றத்தின் பார்வைக்கு வைக்கப்படுகிறது.

பொருள் எண் .26

தாரமங்கலம் நகராட்சிக்கு சொந்தமான பேருந்து நிலைய கட்டண கழிப்பிடம் அரசாணை (நிலை) எண்.191 நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் (நிதி) துறை நாள்.19.9.2008–ன்படி 2020–2021 ஆம் ஆண்டிற்கு (01.04.2020 முதல் 31.03.2023 வரை) ஏலம் விடப்பட்டு 2021–2022 மற்றும் 2022–2023 ஆகிய ஆண்டிற்கு கால நீட்டிப்பு செய்து புதுப்பித்து கொடுக்கப்பட்டு, அவற்றின் ஏல காலம் 31.03.2023அம் தேதி முடிவடைவதால், மீண்டும் தற்போது அரசாணையின்படி 2023–2024 ஆம் ஆண்டிற்கு ஏலம் விட (01.04.2023 முதல் 31.03.2026) அரசாணை நிலை எண்.181 நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை நாள்.19.09.2008–ன் படி புதியதாக ஏலம் விட மன்றத்தின் பார்வைக்கு வைக்கப்படுகிறது.

பொருள் எண் .27

தாரமங்கலம் நகராட்சி 20வது வார்டு சங்கிகிரி ரோடு பகுதியில் சிவாஜி சிலை அமைப்பது தொடர்பாக மனோன்மணி க/பெ.கருணாகரன் என்பவரால் ஓமலூர் நீதிமன்றத்தில் தொடரப்பட்ட வழக்கு எண்.338/2015–னை நடத்தி கொடுப்பதற்கு திரு. கண்ணன் வழக்கறிஞருக்கு ரூ.10000/– தாரமங்கலம் நகராட்சியின் நகர் மன்ற தலைவரின் முன் அனுமதி பெற்று பொது நிதியிலிருந்து வழங்கியமைக்கு பின்னேற்பு வேண்டி மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

பொருள் எண் .28

தாரமங்கலம் நகராட்சி அலுவலக உபயோகத்திற்கு உள்ளூர், வெளியூர் அலுவலகங்களுக்கு தபால்கள் அனுப்பி வைப்பதற்கு அஞ்சலக வில்லைகள் இருப்பு இல்லாததால், அதற்கு தேவையான அஞ்சலக வில்லைகள் வாங்க தொகை ரூ.5000/– அஞ்சல் அலுவலர் சேலம் அவர்களுக்கு தாரமங்கலம் நகராட்சியின் நகர் மன்ற தலைவரின் முன் அனுமதி பெற்று பொது நிதியிலிருந்து வழங்கியமைக்கு பின்னேற்பு வேண்டி மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

**பொருள் எண் .29**

தாரமங்கலம் நகராட்சி அலுவலக கோப்புகள், படிவங்கள் வரிவசூல் கையேடுகள் ஜெராக்ஸ் எடுத்தமைக்கும் மற்றும் கணினி பயன்பாட்டிற்கு தேவையான A4 And Legal பேப்பர் வாங்கியமைக்கு வி.தன்ராஜ் என்பவருக்கு காசோலை ரூ.13567/—யை தாரமங்கலம் நகராட்சியின் நகர் மன்ற தலைவரின் முன் அனுமதி பெற்று பொது நிதியிலிருந்து வழங்கியமைக்கு பின்னேற்பு வேண்டி மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

**பொருள் எண் .30**

தாரமங்கலம் நகராட்சியில் 27 வார்டுகளிலும் தூய்மை இந்தியா திட்டம் 2.0 திட்டம் செயல்படுத்த திறந்தவெளியில் மலம், சிறுநீர் கழித்தல் இல்லாத நகராட்சியாக சான்று பெறுதவற்கு பொது மக்களின் கருத்துக்கள் தெரிவிக்க மாலை மலர், தினசரி நாளிதழில் விளம்பரம் செய்தமைக்கு தொகை ரூ.2016/—யை தாரமங்கலம் நகராட்சியின் நகர் மன்ற தலைவரின் முன் அனுமதி பெற்று பொது நிதியிலிருந்து வழங்கியமைக்கு பின்னேற்பு வேண்டி மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

**பொருள் எண் .31**

தாரமங்கலம் நகராட்சிக்கு சொந்தமான பொது சுகாதார வாகன ட்ராக்டர் எண்.TN.30 AZ.0964 –ஐ 2022—2023 ஆம் ஆண்டிற்கான தகுதிச்சான்று (F.C) பெறுவதற்கு அனுப்பும் பொருட்டு பெயிண்டிங், டிங்கர், வெல்டிங், எலட்ரிகல்ஸ் ஆகிய பழுது பணிகள் பழுது நீக்கம் செய்வதற்கு குறுகியகால விலைப்புள்ளி கோரியதில் குறைந்த விலைப்புள்ளி கொடுத்துள்ள லட்சுமி ஆட்டோ டீசல் ஒர்க்ஸ், மேட்டூர் என்ற நிறுவனத்திடமிருந்து 12.12.2022 ம் தேதி அன்று வரப்பெற்ற பட்டியல் படி தொகை ரூ.1,24,992/— ஐ தாரமங்கலம் நகராட்சியின் நகர் மன்ற தலைவரின் முன் அனுமதி பெற்று பொது நிதியிலிருந்து காசோலை வழங்கியமைக்கு பின்னேற்பு வேண்டி மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

**பொருள் எண் .32**

தாரமங்கலம் நகராட்சிக்கு சொந்தமான அரியபுத்திரன் பூங்காவினை பொதுமக்கள் பயன்பாட்டிற்கு கொண்டு வரும் நிலையில் பூங்காவில் உள்ள பொருட்களின் பாதுகாப்பு நலன்கருதி, அப்பகுதியில் கேமராக்கள் பொருத்துவதற்குவதற்கான, செலவின தொகை ரூ.65000/— தொகையினை நகராட்சியின் பொதுநிதியில் மேற்கொள்ள நகர் மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**பொருள் எண் .33**

சேலம் மாவட்டம் தாரமங்கலம் நகராட்சி 1 முதல் 27 வார்டு பகுதிகளிலும் புல், பூண்டு, முட்செடிகளை வெட்டுவதற்கு பயன்படுத்தும் 3 புல்வெட்டும் இயந்திரங்கள் பயன்படுத்துவதற்கு தேவையான கயிறு மற்றும் பிளேடு ஆகியவற்றினை கொள்முதல் செய்தமைக்கும் மற்றும் நகராட்சிக்கு சொந்தமாக புதியதாக வாங்கப்பட்ட 1 ஹட்ச்.பி. மோட்டார் பயன்படுத்துவதற்கு தேவையான ஓஸ் வாங்கியமைக்கு தொகை ரூ.24922/– ஐ ஆறுபடை ஏஜென்சீஸ் நிறுவனத்திற்கு நகராட்சியின் பொதுநிதியில் காசோலை வழங்க மன்றத்தின் பார்வைக்கும் அனுமதிக்கும் வைக்கப்படுகிறது.

**பொருள் எண் .34**

தாரமங்கலம் நகராட்சியில் சில்லரை செலவினங்கள் உலக கழிவறை தினத்திற்கு பேனர் அடித்தமைக்கு, பேட்டரி வாகனத்தில் விளம்பரம் செய்தமைக்கு பென்டிரைவ் வாங்கியது, பொது சுகாதார வாகனம் டியூப், பஞ்சர் பழுது பார்த்தது, பொது சுகாதார வாகனம் எப்.சி. செய்தது, பேருந்து நிலையத்தில் விளம்பரம் பிரேம் பெயிண்டிங் செய்தது, 7வது வார்டு நங்கவள்ளி மெயின் ரோடு பகுதியில் 6 இன்ஜ் கேட் வால்வு பழுது செய்தமைக்கு, குடிநீர் பகுப்பாய்வு செய்வதற்கு 5 கேன் வாங்கியது, திடக்கழிவு மேலாண்மை திட்ட விழிப்புணர்வு ஏற்படும் வகையில் பள்ளி மாணவர்களுக்கு போட்டி வைத்து பரிசு வழங்கியது, 2021–2022 தணிக்கைக்கு அறிக்கை ஜெராக்ஸ் மற்றும் பைண்டிங் செய்தது, தெருவிளக்கு சுவிட்ச் வாங்கியமைக்கு, பொதுக்கழிப்பிடத்திற்கு சர்வீஸ் ஒயரிங் செய்தது, பொது சுகாதார உபயோகத்திற்கு டார்ச் லைட் வாங்கியது, கேட் வால்வு பழுது சரி செய்வதற்கு போல்ட் வாங்கியது, தமிழ்நாடு மின்வாரியத்திற்கு 110 கிலோ வாட் சர்வீஸ்க்கு சர்வீஸ் செய்தது, அலுவலக பயன்பாட்டிற்கு ரப்பர், சீல் செய்தது தொகை ரூ.34825/–திரு.ப.கௌதம் இளநிலை உதவியாளர் வசம் சம்மந்தப்பட்ட தொகைகளை செலுத்துவதற்கு வழங்கப்பட்டமைக்கு, தாரமங்கலம் நகராட்சியின் நகர் மன்ற தலைவரின் முன் அனுமதி பெற்று பொது நிதியிலிருந்து வழங்கியமைக்கு பின்னேற்பு வேண்டி மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

**பொருள் எண் .35**

சேலம் மாவட்டம் தாரமங்கலம் நகராட்சி 1 முதல் 27 வார்டு பகுதிகளிலும் திடக்கழிவு மேலாண்மை பணிகள் தொய்வு ஏற்படாமல் பணி செய்வதற்கு பொது சுகாதார வாகன எண்.TN.27 W.6780-க்கு டயர் 20 வருடங்களுக்கு மேல் ஆகிவிட்டதால், மிகவும் பழுதடைந்து அடிக்கடி பஞ்சர் ஏற்படுவதால் புதியதாக டயர் டியூப் வாங்கி கொள்ள குறுகிய கால விலைப்புள்ளி கோரி ஸ்ரீ கிருஷ்ணா டயர்ஸ் ஓமலூர் மெயின் ரோடு என்ற நிறுவனத்திற்கு தொகை ரூ.44000/– ஐ நகர் மன்ற தலைவர் அவர்களின் முன் அனுமதி பெற்று நகராட்சியின் பொதுநிதியில் காசோலை வழங்கியமைக்கு மன்றத்தின் பின்னேற்பு அனுமதி வேண்டப்படுகிறது.

**பொருள் எண் .36**

தாரமங்கலம் நகராட்சி தூய்மை இந்தியா திட்டம் 2.0, 2022–2023 ஆம் ஆண்டு புதிய நுண் உயிரி செயலாக்க மையத்தில் குப்பைகளை அகற்றும் பணிகள் மேற்கொள்வதற்கு 110 கிலோ வாட் டிரான்ஸ்பர் மின்சார வாரியத்திலிருந்து அமைக்க தேவைப்படும் பேனல்போர்டு, சுவிட்ச் பாக்ஸ் மற்றும் மின் இணைப்பு கேபிள் ஆகியவறை கொள்முதல் செய்திட ஏற்கனவே நகர் மன்றத்தில் தீர்மானம் நிறைவேற்றப்பட்டு அதன்படி கொள்முதல் செய்து மேற்காணும் பணி நடைபெற்று வருகிறது. மேலும் கூடுதலாக U.G. கேபிள், ஒயர் மற்றும் இதர உபகரணங்கள் தேவைப்படுவதால் கொள்முதல் செய்வதற்கு குறுகியகால விலைப்புள்ளி கோரி அவற்றில் வரப்பெற்ற குறைந்த விலைப்புள்ளி கொடுத்த Tejas Power Control, Mayyanur, Salem-4 நிறுவனத்திற்கு தொகை ரூ.17582/– தாரமங்கலம் நகராட்சியின் நகர் மன்ற தலைவரின் முன் அனுமதி பெற்று பொது நிதியிலிருந்து வழங்கியமைக்கு பின்னேற்பு வேண்டி மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

**பொருள் எண் .37**

தாரமங்கலம் நகராட்சி அலுவலக பயன்பாட்டிற்கு பயன்படுத்தப்படும் கணினிக்கு பிரிண்டர் டோனர்கள், 11 எண்ணிக்கை கருப்பு மை பூர்த்தி செய்தது, ஜெராக்ஸ் மெஷின் கருப்பு மை 2 பூர்த்தி செய்து கொடுத்தது, இதர உபகரணங்கள் வாங்கியமைக்கு லாஜிக் இன்போ டெக் நிறுவனத்திற்கு ரூ.19500/–யை நாள்.30.12.2022ஆம் தேதியில் தாரமங்கலம் நகராட்சியின் நகர் மன்ற தலைவரின் முன் அனுமதி பெற்று பொது நிதியிலிருந்து வழங்கியமைக்கு பின்னேற்பு வேண்டி மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

**பொருள் எண் .38**

சேலம் மாவட்டம் தாரமங்கலம் நகராட்சியில் பொது சுகாதார பணியாளர்கள் Out sourcing முறையில் 01.04.2023 முதல் பணி செய்வதற்கு நகராட்சிகள் நிர்வாக இயக்குநர் சென்னை அவர்களிடமிருந்து ந.க.எண்.34638/2022/EA2-SWM-14 நாள்.10.01.2023–ன்படி ஒரு டன் குப்பை தரம் பிரிப்பதற்கு ரூ.4154.50 வீதம் என செயல்முறை ஆணை வரப்பெற்றுள்ளது. நகராட்சிகள் நிர்வாக இயக்குநர் அவர்களின் நிர்வாக அனுமதி ஆணையின்படி அவுட்சோர்சிங் முறையில் தூய்மை பணிகள் மேற்கொள்ள ஒப்பந்தப்புள்ளி கோரி நடவடிக்கை மேற்கொள்ள மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

**பொருள் எண் .39**

உதவி கோட்டப்பொறியாளர், நெடுஞ்சாலை க (ம) ப ஓமலூர், நாள்.**04.08.2022**—ன்படி வரப்பெற்ற கடிதத்தில் தாரமங்கலம் நகராட்சிக்கு உட்பட்ட அரசு சாலையிலுள்ள பலன் தரும் மரங்களுக்கு மரமகசூல் குத்தகை தொகை (**01.07.2022** முதல் **30.06.2023** முடிய) ரூ.**7604/—** கீழ்கண்ட கணக்கு தலைப்பில் செலுத்தி அசல் சீட்டுடன் ஒப்பந்த பத்திரத்தையும் (Lease agreement) அனுப்பி வைக்குமாறு தெரிவிக்கப்பட்டுள்ளதை தொடர்ந்து, கீழ்க்கண்ட தலைப்பில்

1054-00 Roads and Bridges – 800 Miscellacous Revenue Receipts –
As-9001 Receipts from Avenue UP code – 1054-00-800-AS-9012
IHFRMS 1054-00-800-AS-29001

இத்தலைப்பில் தொகை ரூ.**7604/—** ரொக்கமாகவும் பணம் செலுத்தும்படி தெரிவிக்கப்பட்டுள்ளது. மேலும் சரக்கு மற்றும் சேவை வரி **18** சதவீதம் (GST) கோட்டப்பொறியாளர் (நெ) க (ம) ப எடப்பாடி, அவர்களின் (Divisional Engineer, Highways, Edappadi) என்ற பதவிப்பெயரில் ரூ.**1368/—**யை வங்கி வரைவோலை எடுத்து அனுப்பி வைப்பதற்கு இந்நகராட்சியின் பொதுநிதியில் செலவினம் மேற்கொள்ள நகர் மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

**பொருள் எண்.40**

சேலம் மாவட்டம் தாரமங்கலம் நகராட்சிக்குட்பட்ட பகுதிகளில் உள்ள 27 வார்டுகளிலும் கீழ்க்கண்ட விவரப்படி, தெருவிளக்குகள் அமைந்துள்ளன.

| வ.எண் | விவரம் | எண்ணிக்கை |
|---|---|---|
| 1 | டியூப் லைட்டுகள் | 992 |
| 2 | எஸ்.வி. லேம்ப் | 190 |
| 3 | CFL | 295 |
| 4 | Hy-Mass Light | 3 |
| 5 | LED Light | 50 |
| | **மொத்தம்** | **1530** |

மேற்கண்ட தெருவிளக்குகள் கோடை காலம் மற்றும் மழை காலத்தினால் பழுதடையும் போது அதற்கு தேவையான உபகரணங்கள் கொள்முதல் செய்திடவும் மேற்படி பொருட்கள் தற்சமயம் ஏதும் இருப்பில் இல்லாததால், **2022—2023**ஆம் ஆண்டிற்கு தேவையான தெருமின்விளக்கு உபகரணங்கள் வாங்குவதற்கு ஏற்கனவே கொள்முதல் செய்யப்பட்டிருந்த நிறுவனத்தில் அதே விலை விகிதத்தில் **31.03.2023** முடிய ஒப்பந்தத்தை கால நீட்டிப்பு செய்து கொள்ள நகராட்சி மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**பொருள் எண்.41**

சேலம் மாவட்டம் தாரமங்கலம் நகராட்சிக்குட்பட்ட பகுதிகளில் உள்ள 27 வார்டுகளிலும் மொத்தம் 108 இடங்களில் அமைக்கப்பட்டுள்ள ஆழ்துளைக்கிணறுகளில் 2HP, 3HP, 5HP மின் மோட்டார்கள் பொருத்தப்பட்டு பயன்பாட்டில் உள்ளது. மழைக்காலத்தில் அடிக்கடி மின்வெட்டு மற்றும் இடி, மின்னல், காற்று காரணமாகவும், மேலும் பொதுமக்கள் பயன்பாட்டின் போதும் மேற்படி மின்மோட்டார்கள் அடிக்கடி பழுது ஏற்பட்டு பொதுமக்கள் குடிநீருக்காக அவதிப்படுகிறார்கள். ஆகவே அவசர அவசியத்தின் பொருட்டு பொதுமக்களுக்கு சீரான குடிநீர் விநியோகம் செய்ய வேண்டியுள்ளதால், அதற்கு தேவையான மின் மோட்டார்களின் பழுதான பாகங்களை மாற்றி, பழுதுநீக்கம் செய்வதற்கு, பழுதடைந்துள்ள மின்மோட்டார் இதர உபகரணங்கள் மாற்றி புதிய மின்மோட்டார் வாங்குவதற்கும் 2022–2023ஆம் ஆண்டிற்கு மின்மோட்டார் பழுது நீக்கம் செய்வதற்கு ஏற்கனவே பராமரிப்பு செய்யும் பணி மேற்கொண்டிருந்த நிறுவனத்திற்கே 31.03.2023 முடிய ஒப்பந்தத்தை கால நீட்டிப்பு செய்து கொள்ள நகராட்சி மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**பொருள் எண்.42**

சேலம் மாவட்டம் தாரமங்கலம் நகராட்சியில் 2022–2023 ஆம் ஆண்டிற்கு புதிய ஒப்பந்ததாரராக பதிவு செய்து தரும்படி வரப்பெற்ற கீழ்க்காணும் விண்ணப்பங்கள் மன்றத்தின் பார்வைக்கு வைக்கப்படுகிறது.

1) ஜெ.கே.எஸ்.அன்ட் கோ கான்ட்ராக்டர், பெரியேரிப்பட்டி
2) ஸ்ரீ ராஜா ராணி அன்ட் கோ மேட்டுமாரனூர்
3) எஸ்.கோவிந்தசாமி, ஒப்பந்ததாரர், துட்டம்பட்டி

**பொருள் எண்.43**

சேலம் மாவட்டம் தாரமங்கலம் நகராட்சிக்கு உட்பட்ட பகுதியில் வசிக்கும் திரு.கே.ஆனந்தன் த/பெ.கரியமலை கவுண்டர், 3வது வார்டு, பாரக்கல்லூர், என்பவரிடமிருந்து வரப்பெற்ற கடிதத்தில் இந்நகராட்சியின் 2022–2023 ஆம் ஆண்டுக்கான தினசரி மார்கெட் குத்தகை உரிமத்தற்கான ஏலத்தில் ரூ.1,25,85,568/– ஐ செலுத்தி 01.04.2022 முதல் 31.03.2023 வரை சுங்க கட்டணம் வசூல் செய்யும் உரிமம் பெற்று தினசரி மார்கெட்டில் சுங்க வசூல் செய்து வருகிறேன். தினசரி மார்கெட்டில் சுங்க வசூலில் இவ்வண்டு பெருநஷ்டம் ஏற்ப்பட்டுவிட்டதால் என்னால் 2023–2024 ஆம் ஆண்டுக்கான உரிமத்தை புதுப்பித்துக் கொள்ள இயலாது. எனவே 2023–2024 ஆம் ஆண்டுக்கான தாரமங்கலம் தினசரி மார்கெட் குத்தகை இனத்திற்கான பொது ஏலத்தை நடத்திக் கொள்ளுமாறு கடிதத்தில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

மேலும் இது தொடர்பாக இவ்வலுவலக ந.க.எண்.61/2023/அ1 நாள்.03.01.2023–இன் படி திரு.கே.ஆனந்தன் என்ற ஏலதாரருக்கு இந்நகராட்சி வழங்கிய உத்தரவில் குறிப்பிட்டுள்ள நிபந்தனைகளின் படி தாங்கள் தான் 2023–2024 முதல் 2025–2026 வரை புதுப்பித்து காலநீட்டிப்பு செய்து தினசரி மார்க்கெட் சுங்கவசூல் மேற்கொள்ள வேண்டும் என்று கடிதம் அனுப்பி வைக்கப்பட்டுள்ளது என்ற விவரம் மன்றத்தின் பார்வைக்கு வைக்கப்படுகிறது.

பொருள் எண்.44

தாரமங்கலம் நகராட்சியில் பொறியியல் பிரிவு பணிகளை இடைப்பாடி நகராட்சியின் நகராட்சி பொறியாளர் மற்றும் உதவிப்பொறியாளர் இந்நகராட்சிகளின் திட்டபணிகள் மற்றும் பொதுநிதியில் மேற்கொள்ளும் பணிகளை கூடுதல் பொறுப்புடன் கவனித்து வருகின்றனர். தற்போது மாவட்ட ஆட்சித்தலைவரால் நிர்ணயம் செய்யப்பட்டுள்ள ஊதிய விகிதப்படி, நகர் மன்றத்தின் அனுமதி பெற்று பொறியியல் பிரிவில் தற்காலிக தொழில்நுட்ப உதவியாளராக திரு.த.பாலாஜி பணிபுரிந்து வருகின்றார். மேற்படி தொழில்நுட்ப உதவியாளர் அடிக்கடி திட்டப்பணிகளுக்கான முன்மொழிவுகள் எடுத்துக்கொண்டு சென்னை அலுவலகத்திற்கும், சேலம் அலுவலகத்திற்கும் சென்று வருவதால், இந்நகராட்சியில் திட்டப்பணிகள் மற்றும் பொதுநிதி தொடர்பான பணிகளில் சுணக்க நிலை ஏற்படுவதை தவிர்க்க பி.இ (சிவில்) முடித்த திரு.கே.கணேஷ் பாபு என்பவரை (திரு.வசந்த் என்பவர் பணியிலிருந்து விலகிக்கொண்டார்) கூடுதலாக தொழில்நுட்ப உதவியாளராக தற்காலிகமாக 01.01.2023 முதல் 30.06.2023 முடிய 6 மாதங்களுக்கு சேலம் மாவட்ட ஆட்சித்தலைவர் நிர்ணயம் செய்த ஊதிய விகிதப்படி பணி செய்வதற்கு மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

பொருள் எண்.45

தாரமங்கலம் நகராட்சிக்கு உட்பட்ட வாரச்சந்தையில் அமைந்துள்ள 8.00 லட்சம் லிட்டர் கொள்ளளவு கொண்ட மேல்நிலை நீர் தேக்க தொட்டியில் இருந்து ஜலகண்டாபுரம் ரோடு முதல் தேர்நிலையம் வரை புதியதாக 200 மீட்டர் 6 இன்ஜ் பம்பிங் மெயின் லைன், கேட்வால்வுகள் பொருத்தி பைப் லைன் விஸ்தரிப்பு செய்து தற்போது கோடைகாலம் ஆரம்பிக்க உள்ளதால், வறட்சி காலங்களில் குடிநீர் விநியோகம் செய்வதற்கு தடை ஏற்படாமல் சீராக வழங்கும் பொருட்டு மேற்படி பணி மேற்கொள்வதற்கு நகராட்சியின் குடிநீர் நிதியிலிருந்து உத்தேச செலவினம் ரூ.350000/– லட்சத்தில் பணி மேற்கொள்வதற்கு மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

**பொருள் எண்.46**

தாரமங்கலம் நகராட்சிக்கு உட்பட்ட 1 முதல் 27 வார்டுகளிலும் திடக்கழிவு மேலாண்மை திட்டத்தின் கீழ் இந்திரா மரகதம் மகளிர் சுயஉதவிக்குழுவின் மூலம் பணிபுரிந்து வரும் 60 ஒப்பந்த பணியாளர்களுக்கு EPF,ESI பிடித்தம் செய்யப்பட வேண்டும். மேற்படி பணியாளர்களுக்கு சேலம் மாவட்ட ஆட்சித்தலைவர்களின் அவர்களின் விலைவிகிதத்தின்படி தினசரி ரூ.420/– வழங்கி EPF, ESI மேற்படி உரிய தலைப்பில் செலுத்துவதற்கு உகந்ததாக இருக்கும் என்பதால் மேற்படி தொகையினை வழங்குவதற்கு மன்றத்தின் பார்வைக்கும் அனுமதிக்கும் வைக்கப்படுகிறது.

**நகர் மன்ற தலைவர்,**
**தாரமங்கலம் நகராட்சி.**

<u>பெறுநர்</u>

நகர்மன்ற துணைத்தலைவர் மற்றும் நகர்மன்ற வார்டு உறுப்பினர்கள்,
தாரமங்கலம் நகராட்சி.